அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2023

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஆறு

## நேரம்: 210 நிமிடங்கள்

**முதலாம் வினாவிற்கும், ஏனையவற்றுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. தாளதசப்பிராணன்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் மார்க்கம், அங்கம், கிரஹம், யதி, லயம் என்பவற்றை விளக்குக.

   ஆ. கோபுச்ச யதியை இறுதியாக கொண்ட ஆதி தாள நான்கு ஆவர்த்தனக் கோர்வை ஒன்றினை தாள அங்க குறியீட்டுடன் எழுதுக.

   (20 புள்ளிகள்)

2. இந்திய பிரதான சாஸ்திரீய மரபில் கேரள மாநிலத்துக்குரிய நடன வடிவத்தின் பெயரினைத் தந்து, அதில் நீர் தெரிந்த வடிவத்தின் தத்துவம், தோற்றம், வளர்ச்சி, பின்னனி இசை, ஒப்பனை இசைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (ஏதேனும் ஒரு நடன வடிவம்)

   (16 புள்ளிகள்)

3. நாட்டியக் கச்சேரி சிறப்புற அமைவதற்கு பக்க வாத்தியங்களின் ஒத்துழைப்பு அவசியம். இக்கூற்றினை விளக்குக.

   (16 புள்ளிகள்)

4. நீர் கற்ற தோடயமங்களத்தின் மூன்றாவது கண்டிகையின் இராகம், தாளம், சாகித்தியத்தின் கருத்து என்பவற்றை குறிப்பிட்டு அதில் வரும் தீர்மானத்தினையும், அடவுச்சொற்கட்டினையும் தாள அங்க குறியீட்டுடன் எழுதுக. (16 புள்ளிகள்)

5. அ. கிராமிய நடனம் என்றால் என்ன?

   ஆ. பக்திசார் கிராமிய நடனங்களில் இரண்டினைக் குறிப்பிட்டு, அவற்றினை ஏன் நாம் ஆடுகின்றோம் என்பதனையும் அதன் உடை ஒப்பனைகளையும் தருக.

   **அல்லது**

   ஆ. கூத்து வகைகளைக் குறிப்பிட்டு, வடமோடி கூத்தின் ஆட்டமுறைகள், உடை, ஒப்பனை, அணிசேர் கருவிகள் பற்றி விளக்குக.

   (16 புள்ளிகள்)

(ம.ப.பா)

6. பின்வரும் கலைச்சொற்களை விளக்குக.

அ. ஜாவளி

ஆ. திருத்தாண்டகம்

இ. நட்டுவாங்கத்தாளம்

ஈ. தென்மோடி (16 புள்ளிகள்)

7. அ. அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்விற்கு தலைமை வகித்த தமிழீழப் பேராசிரியரின் பெயரினைத் தருக.

ஆ. இலங்கையின் பரதக்கலை வளர்ச்சிக்கு தொண்டாற்றி மறைந்த கலைஞர்களைக் குறிப்பிட்டு, அவர்களுள் நீர் விரும்பும் ஒருவரின் கலைப்பணியை விளக்குக.

(16 புள்ளிகள்)

8. "புலம்பெயர் நாடுகளில் அழகியல் கல்வி கற்பதனால் தமிழ்க் கலாச்சாரம் பேணப்படுகிறது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (16 புள்ளிகள்)